3rd July 1962]

சப்-ரிஜிஸ்டிரார் அலுவலகம் (வேட்டவலம்).

*100 கேள்வி.—திரு. கு. கோபாலக் கவுண்டர்: கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருவண்ணுமலை தாலூகா, வேட்டவலம் கிராமத்தில் ஒரு சப்ரிஜிஸ்டிரார் ஆபீசு திறக்கும்படி அரசாங்கத்துக்கு மனு வந்துள்ளதா?

(இ) அப்படியானுல், அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

THE HON. SRI G. BHUVARAHAN : ( ) No, Sir.

(இ) Does not arise

Island Grounds (construction of buildings)

*101 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government have received any resolution from the Corporation of Madras protesting against construction of buildings on the Island Grounds; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) This will be kept in view, if and when any proposal for the construction of buildings on the Island Grounds is mooted.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஐலண்ட் கிரௌண்டில் கட்டிடம் கட்டுவது சம்பந்தமாக பல செய்திகள் பத்திரிகைகளில் வந்திருந் தன. அதன் உண்மையான நிலை என்னவென்று அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஐலண்ட் க்ரௌண்ட்ஸ் ராணுவ ஸ்தாபனத்தினிடம் இருக்கிறது. அவர்களிடம் தகவல் கேட்டிருக் கிறோம். நிலைமை என்னவென்று தகவல் அவர்களிடமிருந்து இன்னும் வரவில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம்: நமது ராஜ்ய சர்க்காரைக் கலந்து ஆலோசிக்காமல் அந்த நிலத்தின்மீது எந்தவிதமான கட்டிடமும் போடக்கூடாது என்றுவது அரசாங்கம் ராணுவ இலாகாவிற்கு எழுதியுள்ளார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ராணுவ இலாகாவினரிடம் என்ன நிலைமை என்றுதான் கேட்டிருக்கிறோம். நிலைமை என்ன வென்று தெரிந்த பிறகு அதற்குமேல் இந்த அரசாங்கம் என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்யும்.

Examiners in courts

*102 Q.—SRI V. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any disparity in emoluments between the examiners in the civil and criminal courts?